**அனுப்புநர்**
திருமதி.செ.அமுதவல்லி,
M.Sc.,B.Ed.,M.Lis.,DEPA.,
இணை இயக்குநர் (பணியாளர்),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**
அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி),
புதுச்சேரி

**ந.க.எண்.246301/பி1/2019** **நாள் : 30.04.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை – 600 006, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மார்ச் 2019 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள் மறுகூட்டல் விண்ணப்பிப்பதற்கான கட்டணத் தொகையினை செலுத்துவது குறித்து அறிவுரை வழங்குதல் – சார்பு.

**பார்வை :** இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்: 24.05.2019

-----

மார்ச் 2019 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு விடைத்தாள் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பிய பள்ளி மாணவர்கள் / தனித் தேர்வர்களுக்கு **02.05.2019 முதல் 04.05 .2019 வரை** ஆன்–லைனில் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளை பின்பற்றி, விண்ணப்பிப்பதற்கு கடைசி நாளான **04.05.2019 அன்று மாலை 6.00 மணிக்கு** மறுகூட்டலுக்கு விண்ணப்பித்த மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட மறுகூட்டலுக்கான மொத்த கட்டணத் தொகையை பள்ளித் தலைமையாசிரியர்கள் **06.05.2019** அன்று சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் ஒப்படைக்குமாறு அறிவுறுத்த வேண்டும். சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் பள்ளித் தலைமையாசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட விடைத்தாள் மறுகூட்டலுக்கான கட்டணத் தொகையை பெற்று **Director of Government Examinations, Chennai – 6** என்ற பெயரில் வரைவு காசோலையாக எடுத்து விண்ணப்பித்த தேர்வர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலுடன் **10.05.2019 அன்று சென்னை–6, அரசுத் தேர்வுகள் துணை இயக்குநர் (பொது)** அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
**இணை இயக்குநர் (பணியாளர்)**

**நகல்**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

} தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும்

3. அ4 பிரிவு அலுவலகம்